**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.65/2024 – PW- 8**

| | |
|---|---|
| Name | திருமதி. சங்கீதா |
| Husband/Father Name | சீனிவாசன் |
| Village /Area | புதுக்கண்டிகை |
| Taluk | நெமிலி |
| Occupation | கிராம நிர்வாக அலுவலர் |
| Age | 33 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 29.08.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது நெமிலி வட்டம், வேப்பேரி கிராம நிர்வாக அலுவலராக பணிபிரிந்து வருகிறேன். கடந்த 2021 ம் ஆண்டு சிறுவளையம் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்த போது 11.07.2021 அன்று எதிரி பிராசாந்த் என்பவரை கைது செய்ததாக சொல்லி நெமிலி காவல் நிலையத்தில் இருந்து எனக்கு கைப்பேசி மூலம் தகவல் தெரிவித்தனர். சிறுவளையம் பஸ் நிலையத்தில் இருப்பதாக கூறினார்கள். என்னை அழைத்தன் பேரில் நானும் என்னுடன் பணி புரியும் கிராம உதவியாளர் பாஞ்சாலை என்பவரும் சிறுவளையம் பேருந்து நிலையத்திற்கு சென்றோம். அங்கு எதிரி பிராசாந் என்பவரை எங்கள் முன்னிலையில் போலீசார் விசாரணை செய்த போது அவர் தன்னுடைய மனைவியின் தங்கை கனிமொழி என்பவரின் குழந்தையை கட்டு கல்லை போட்டு கொலை செய்ததாக வாக்குமூலம் கொடுத்தார். போலீசார் அவர் கொடுத்த வாக்குமுலத்தை

எங்கள் முன்னிலையில் தட்டச்சு செய்துக்கொண்டார்கள். அதில் எங்களை சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நானும் என்னுடைய கிராம உதவியாளரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தார். எதிரி சம்பவ இடத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்த இரத்த கறை படிந்த துணி மற்றும் கத்தி ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் கைப்பற்றிக்கொண்டார்கள் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி ஆவணத்தை குறியிடு செய்ய எதிரி தரப்பில் தன்னை அழைத்து சென்றால் அவர் மறைத்து வைத்திருந்த பொருளை அவர் ஆஜர் படுத்துவதாக ஒப்புதல் வாக்குமுலத்தில் கூறாததால் ஆட்சேபிக்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) என்னுடன் கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தார். என்னிடம் இந்நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கத்தி மற்றும் இரத்த கறை படிந்த துணி தான் மகஜரில் கைப்பற்றிய சொத்துக்களாகும். அவைகள் முறையே **சா.பொ.8** மற்றும் **சா.பொ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு மாலை 05.00 மணிக்கு மேல் தகவல் கிடைக்கபெற்றது. அழைப்பணை ஏதேனும் அனுப்பபட்டதா என்றால் இல்லை போன் மூலம் தான் அழைப்பு வந்தது. நான் எனது உயர் அதிகாரியான

வட்டாட்சியருக்கு தகவல் அளிக்காமல் வேறு எந்த பணிக்கு செல்லகூடாது என்று சொன்னால் சரிதான். நாங்கள் சிறுவளையம் பேருந்து நிலையத்திற்கு கால் மணி நேரத்தில் சென்றோம். அங்கு எதிரி பிரசாந்து, போலீசார் மற்றும் நாங்கள் இருவரும் இருந்தோம். அப்போது போலிசார் 4, 5 பேர் அந்த இடத்தில் இருந்தார்கள். சிறுவளையம் பேருந்து நிலையம் ரோட்டிற்கு இரு புறமும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல ஒன்று மட்டும் தான் உள்ளது. அங்கு ஒரு கடை தான் இருந்தது. பஸ்டாப் என்பதால் அங்கு கடைகள் இல்லை. ஒன்று மட்டும் தான் இருந்தது என்று சொன்னால் சரிதான். அங்கு போலீசார் மாலை 06.00 மணி வரை பிரசாந்தை விசாரித்துக்கொண்டிருந்தார்க்ள. போலீசார் எதிரியை கேள்வி கேட்கும்போது அவர் பதில் கூறினார். அவைகளை எழுதி போலீசார் மடிக்கணினியில் பதிவு செய்தார்கள். எந்த இடத்தில் பிரிண்ட் எடுத்தார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த பேருந்து நிறுத்தத்தில் பிரிண்ட் எடுப்பதற்கான வசதி இருந்ததா என்றால் இல்லை. நான் மேற்படி ஆவணங்களில் கையொப்பம் இடும் போது நேரம் மாலை 06.15 இருக்கும் தட்டச்சு செய்ததை எந்த போலீசார் பிரிண்ட் எடுக்க எடுத்து சென்றார் என்று எனக்கு தெரியாது. நான் பேருந்து நிறுத்ததிற்கு செல்லவும் இல்லை எதிரியிடமிருந்து எந்த விதமான ஒப்புதல் வாக்குமூலமும் என் முன்னிலையில் பெறப்படவில்லை என்னுடைய கிராம உதவியாளரும் என்னுடன் இல்லை என்றும் நாங்கள் யாரும் அந்த இடத்தில் மேற்படி ஆணவங்களில் கையொப்பம் இடவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல் நிலையத்தில் தான் நான் கையொப்பம் இட்டேன் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் என்னை எந்த தேதியில் அதன் பிறகு விசாரித்தார்கள் என்றால் கையொப்பம் பெற்ற தேதியில் தான்

விசாரித்தார்கள். எதிரி பிரசாந்த் எங்கள் முன்னிலையில் இரத்த கறை படிந்த துணி மற்றும் கத்தியை ஆஜர் படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேலும் எதிரி அவர் மேற்படி பொருட்களை எந்த இடத்தில் மறைத்து வைத்துள்ளேன் என்று எங்கள் முன்னிலையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் மற்றம் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவை காவல் நிலையத்தல் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல நான் போலீசாருக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கூறியது போல் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.08.29 15:40:06 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.